**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண்.116/2019**

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.11.2023 | தந்தை பெயர்: | குப்பு |
| பெயர்: | பாலசுந்தரம் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அரசாலமங்கலம் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 58/2023 |
| தொழில்: | | | |

<u>**முதல் விசாரணை : 06.11.2023.**</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

28.08.2002–தேதியிட்ட பிரதிவாதி எனக்கு எழுதி கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 04.03.2019–தேதியிட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 23.03.2019 தேதியிட்ட பதில் சட்ட அறிவிப்பின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.